

## எங்களுடைய வெளியீடுகள்

1. பரம குயவனின் பாத்திரங்கள் (சிறுவர் ஊழிய கதைகள்)
2. பாவத்தின் கொடிய வலையும் அதிலிருந்து விடுதலையும்
3. நான் தேடும் மனிதன் நீ தான் - இயேசு
4. சின்னப்பூக்கள் (சிறுவர் பாடல்கள் ACD)
5. ஜெபக்குறிப்புகள் - 100 (ஜெபக் கையேடு)
6. பரலோகத்தின் திறவுகோல்கள் (வாக்குத்தத்தங்கள் 250)
7. கர்த்தரின் யுத்தங்கள்
8. இச்சையினால் தொடரும் பாவங்கள்

நாங்கள் சுவிசேஷ அக்கினி என்ற பெயரில் ஜெப சுற்றறிக்கை பிரதி மாதம் ஒருமுறை வெளியிடுகிறோம். இது வேதாகமத்திற்குள் வைத்து தினமும் படித்து ஜெபிக்கிறதுக்கு ஏதுவாக சிறிய அளவே இருக்கும். உங்களுக்கு இது தேவனோடு உறவாடுவதற்கு மிக பிரயோஜனமாகவும், ஜெபிக்க பழகவும் பிரயோஜனமாக இருக்கும். இந்த ஜெப சுற்றறிக்கை வேண்டுவோர் எங்கள் முகவரிக்கு தங்களுடைய விலாசத்தை எழுதி அனுப்பினால் நாங்கள் உங்களுக்கு தொடர்ந்து அனுப்பி வைப்போம்.


சகோ. A. பால்ராஜ்

**GOSPEL MISSIONARY PRAYER FELLOWSHIP**

**சுவிசேஷ மிஷினெரி ஜெப ஐக்கியம்**

5/110, சாமிபுரம் காலனி, சிவகாசி கிழக்கு - 626 189.

விருதுநகர் மாவட்டம், (த.நா) தென் இந்தியா, செல் : 94431 78673

*Web : www.gospelfellow.com*

*e-mail : gospelfellowsvks@gmail.com*




# என்னுரை

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, **பாவத்தின் மூலம் வரும் சாபமும் அதின் முடிவும்** என்ற இந்தச் சிறிய புஸ்தகத்தை எழுதிய நோக்கமானது: இன்று பாவத்தினாலும், சாபத்தினாலும் இந்த உலகம் சீர்கெட்டு மெய் தேவனாகிய சிருஷ்டிகரைத் தள்ளி, சிருஷ்டிப்பைத் தொழுதுகொள்வதினால், சாத்தானின் இராஜ்யத்தின் பிரஜையாய், சாபத்தின் வெளிப்பாடாய் இந்தப் பூமியில் ஜனங்கள் சந்ததி சந்ததியாய் அங்கவீனமாயும், தரித்திரராயும், தீராத நோயுள்ளவராயும், மனதில் நிம்மதியில்லாமல் அலைகிறவர்களாயிருக்கும் ஜனங்களைக் குறித்து நான் என் இருதயத்தில் சிந்தித்தபொழுது, ஆவியானவர் என்னில் இடைபட்டார். நான் சிருஷ்டித்த ஜனங்கள் தேவ சாயலாய் சிருஷ்டிக்கப்பட்டார்கள். ஆனால் என்னைத் தள்ளி தங்களுக்கு இஷ்டமானபடி தெய்வ வழிபாடு செய்து, சாத்தானின் சொல்லைக் கேட்டு, பாவத்தைச் செய்து சாபத்தை அனுபவிக்கிறார்கள் என்று ஆவியானவர் இயேசுவின் மனதுருக்கத்தை எனக்குள் வைத்தார். அவர்கள் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளும் வழியை அவர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்று என் மனதில் பேசினார். ஆகையால் இந்தப் புஸ்தகத்தை எழுதியிருக்கிறேன்.

இந்த புஸ்தகத்திற்கு அணிந்துரை யாரிடம் வாங்க வேண்டும் என்று நாங்கள் ஜெபித்தபொழுது அருமையான ஜெப ஊழியர், பாஸ்டர்.L.ஜோசப், ஸ்தாபகர் முழங்கால் யுத்தம் மன்றாட்டு ஊழியங்கள், ஓசூர் அவர்களை ஆவியானவர் நினைப்பூட்டினார். உடனே நாங்கள் அவர்களைத் தொடர்பு கொண்டபொழுது, அவர்களும் எங்கள் ஊழியத்தை நேசித்து உடன்தானே அணிந்துரை எழுதித் தந்தார்கள்.

கர்த்தர் அவர்களையும், அவர்கள் குடும்பத்தையும், ஊழியத்தையும், உடன் ஊழியர் களையும் இம்மையிலும் மறுமையிலும் நூறத் தனையாய் ஆசீர்வதிப்பாராக. இந்தப் புஸ்தகம் வெளிவருவதற்கு பலர் ஜெபித்தார்கள், பலர் உதவி செய்தார்கள். இவர்கள் பிரயாசத்தைக் கர்த்தர் மறவாமல் இம்மையிலும் மறுமையிலும் நூறத் தனையாய் ஆசீர்வதிப்பாராக!

கிறிஸ்துவின் பணியில்,
உங்கள் சகோதரன்
**A.பால்ராஜ்**

# பொருளடக்கம்


| எண் | தலைப்புகள் | பக்கம் |
|---|---|---|
| 1 | பாவம் | 1 |
| 2 | சாபம் | 8 |
| 3 | நியாயத் தீர்ப்பு | 21 |
| 4 | நியாயத்தீர்ப்பும் ஆசீர்வாதமும் | 31 |
| 5 | முடிவுரை | 35 |

**உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும், உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே, அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது. (ஏசா 59:2)**

# 1.பாவம்

**"நீ நன்மைசெய்தால் மேன்மை இல்லையோ? நீ நன்மைசெய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும்" (ஆதி.4:7)** என்று வேதம் சொல்லுகிறது.

எகிப்திலிருந்து தம் ஜனங்களை அழைத்து வர மோசேக்கு பின்பு யோசுவாவை கர்த்தர் தெரிந்து கொண்டு இஸ்ரவேலரை வழி நடத்தினார். அவர்கள் யோர்தானை கடந்த பின்பு, எரிகோ கோட்டை பெரும் சவாலாக (தடையாக) அவர்களுக்கு நின்றது. யோசுவாவும் அனைத்து இஸ்ரவேலரும் என்ன செய்வதென்று தெரியாமல் கலங்கி நின்றனர்.

**''அப்பொழுது கர்த்தருடைய சேனையின் அதிபதி யோசுவாவை நோக்கி: உன் கால்களிலிருக்கிற பாதரட்சைகளைக் கழற்றிப்போடு, நீ நிற்கிற இடம் பரிசுத்தமானது என்றார்; யோசுவா அப்படியே செய்தான்''. (யோசுவா 5:15) நமக்கு பரிசுத்தம் தேவை!**

**"எரிகோ இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக அடைக்கப்பட்டிருந்தது; ஒருவரும் வெளியே போகவுமில்லை, ஒருவரும் உள்ளே வரவுமில்லை. கர்த்தர் யோசுவாவை நோக்கி; இதோ, எரிகோவையும் அதின் ராஜாவையும் யுத்த வீரரையும் உன் கையில் ஒப்புக் கொடுத்தேன்''. (யோசுவா 6:1,2) என்றார். எரிகோ மதில் இடிந்து விழுவதற்கு கர்த்தர் சில கட்டளைகளையும் கொடுத்தார்.**

**''யுத்தபுருஷராகிய நீங்கள் அனைவரும் பட்டணத்தைச் சூழ்ந்து ஒருதரம் சுற்றிவாருங்கள்; இப்படி ஆறுநாள் செய்யக்கடவீர்கள்.**

**ஏழு ஆசாரியர் (உடன்படிக்கை) பெட்டிக்கு முன்பாக ஏழு கொம்பு எக்காளங்களைப் பிடித்துக் கொண்டு போகவேண்டும்; ஏழாம்நாளில் பட்டணத்தை ஏழுதரம் சுற்றிவரக்கடவர்கள்; ஆசாரியர் எக்காளங் களை ஊதவேண்டும்.**

**அவர்கள் அந்தக் கொம்புகளினால் நெடுந்தொனி இடும்போதும், நீங்கள் எக்காளசத்தத்தைக் கேட்கும் போதும், ஜனங்கள் எல்லாரும் மகா ஆரவாரத்தோடே ஆர்ப்பரிக்கக்கடவர்கள்; அப்பொழுது பட்டணத்தின் அலங்கம் இடிந்துவிழும்; உடனே ஜனங்கள் அவரவர் தங்களுக்கு நேராக ஏறக்கடவர்கள் என்றார்'' (யோசுவா 6:3-5)**

பிரியமானவர்களே, கர்த்தர் நம்மை இந்த உலக வழிபாடுகளுக்கு விலக்கி தேவ ராஜ்யத்தை நம்முடைய இருதயத்தில் ஸ்தாபிக்க விரும்புகிறார். இயேசு கிறிஸ்து ஊழியம் செய்த நாட்களில், **“இதோ, இங்கே என்றும், அதோ, அங்கே என்றும் சொல்லப்படுகிறதற்கும் ஏதுவிராது; இதோ, தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே என்றார்”. (லூக் .17:21.)**

தேவனுடைய இராஜ்யம் நமக்குள் ஸ்தாபிக்க வேண்டுமானால் தேவனுக்கும் நமக்கும் ஒரு உடன் படிக்கை தேவை. மோசேயின் நாட்களில் கர்த்தருடைய உடன்படிக்கை பெட்டியை இஸ்ரவேல் ஜனங்கள் மத்தியில் ஆசாரியர்கள் சுமந்து கொண்டு போனார்கள். அந்த உடன்படிக்கை பெட்டியை கொண்டு வரும் போதெல்லாம் கர்த்தர் நம்மோடு

வருகிறார் என்ற விசுவாசம் அவர்களுக்குள் இருந்தது. அது பெலன் கொண்டது.

அந்த விசுவாசத்தின் மூலமாகத்தான் அவர்கள் இராஜ்யங்களையும், இராஜாக்களையும் ஜெயித் தார்கள். நாமும் அந்த விசுவாசத்தின் மூலம் உலகத்தை ஜெயிக்கவேண்டும்.

**“உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை.**

**ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத் திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவை களல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்.**

**உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென் றைக்கும் நிலைத்திருப்பான்”. (1யோ. 2:15-17.)**

ஆம், நாம் இந்த உலகத்திற்குரியவர்களல்ல. தேவன் யோசுவாவுக்குக் கொடுத்த கட்டளை இஸ்ரவேலரை எகிப்திலிருந்து கானான் தேசத்திற்குள் கொண்டு போய் சேர்ப்பதே!. கர்த்தர் கொடுத்த இந்தப் பொறுப்பை நிறைவேற்றி முடிக்க வேண்டுமென்றால் கர்த்தருடைய உடன்படிக்கை பெட்டி கட்டாயம் அவர்களுடன் செல்ல வேண்டும். உடன்படிக்கையென்பது தேவனும் நாமும் செய்து கொள்ளும் கூட்டு ஒப்பந்தம்.

அதற்குள் தேவன் வாசம் பண்ணுகிறார். இந்த ஒப்பந்தத்தில் நாம் உண்மையில்லாதவர்களாயிருந் தாலும் அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார். இன்றைக்கு நாம் அவருடைய உடன்படிக்கை பெட்டியை நம்முடைய இருதயத்தில் சுமந்து திரிகிறோம். இந்த உடன்படிக்கையானது இயேசுவின் இரத்தத்தினாலுண்டானதாயிருக்கிறது. இந்த உடன் படிக்கையில் நாம் மனசாட்சியின் மூலம் நிலைத்திருந் தால் அது உயிருள்ளதாயிருக்கும். நிலைத்திரா விட்டால் அது செத்ததாகிவிடும்.

கிறிஸ்துவுடன் செய்து கொண்ட அவருடைய இரத்தத்தினாலுண்டான உடன்படிக்கையை முறித்துக் கொண்டால், பிசாசு அந்த ஆத்துமாவின் மேல் எஜமானாகிறான். உடனே, இயேசு தன் அதிகாரத்தை ஆத்துமாவின் மேல் இருந்து விலக்கிக் கொள்ளுவார். இனி இயேசுவுக்கும் நமக்கும் ஒட்டுமில்லை உறவு மில்லை என்ற நிலைக்கு தள்ளப்படுவோம்.

பின்பு நாம் சாத்தானுக்கு அடிமையாகிவிடுகிறோம். இதன் மூலம் கிறிஸ்து அந்த ஆத்துமாவுக்கு கொடுத்த ஜீவன் மரித்து விடுகிறது. செத்துப்போன ஆத்துமாக் களை இந்த உலகத்தின் அதிபதியான சாத்தான் ஆட்சி செய்கிறான் என்பதை அறிய வேண்டியது கட்டாயம்.

**எபிரெயர் 2:14 சொல்லுகிறது: சாத்தான் மரணத்துக்கு அதிகாரி. நாம் தேவனைவிட்டு விலகவும், பாவம் செய்யவும் தூண்டுகிறான். வேதம் சொல்லுகிறது: "அவனவன் தன் தன் சுய இச்சையினாலே இழுக்கப் பட்டு, சிக்குண்டு சோதிக்கப்படுகிறான்.**

**பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும்". (யாக். 1:14,15)**

ஒரு மனிதனுக்குள் தேவனுடைய இராஜ்யம் எடுக்கப் பட்ட பின்பு அவனுக்குள் ஆவிக்குரிய இருள் சூழ்ந்து விடுகிறது. அவனுடைய வாழ்வின் உலகப்பிரகாரமான காரியமானாலும், கர்த்தருடைய ஊழியமானாலும் இடறல், குழப்பம், தடைகள், வியாதி, நஷ்டம், மகிழ்ச்சி இன்மை இவைகள் அவனை வேதனைப்படுத்துகிறது. தொழில், வியாபாரம், படிப்பு, வேலை, குடும்ப சமாதானம் அனைத்திலும் தோல்வியை சந்திக்கிறான்.

**"கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்; அதனோடே அவர் வேதனையைக் கூட்டார்".**

**(நீதி. 10:22)**

கர்த்தர் வேதனையை தரமாட்டார். துன்பமும் வேதனை களும் சாத்தானால் வருகிறது என்பதை அறிந்து நாம் எச்சரிக்கையாய் இருக்கவேண்டும். தீய காரியங்களை சிந்தித்து அதை செயல்படுத்தும்படி சாத்தான் ஒவ்வொரு ஆணாயிருந்தாலும், பெண்ணாயிருந் தாலும் அவர்களை தூண்டிவிடுகிறான்.

**"தீய நோக்கம் பாவமாம்;" (நீதி. 24:9)**

நாம் தேவனுக்கு விரோதமாக தீமையானவைகளைச் செய்ய சிந்திக்கும் போதே பாவத்தில் விழுந்து விடுகிறோம். அதைப் பார்த்து சாத்தான் கை தட்டி சிரிக்கிறான்.

இயேசு துக்கப்படுகிறார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சிலுவை மரணத்தின் மூலம் செய்து முடித்த விலையேறப் பெற்ற இரட்சிப்பை இழந்து விடுகிறோம். இயேசு நமக்காக பரிதவிக்கிறார். **“பாவத்தின் சம்பளம் மரணம்;” (ரோமர் 6:23)** என்று வேதம் சொல்லுகிறது. ஒவ்வொரு மனிதனுக்குள்ளும், மனுஷிகளுக்குள்ளும் சிந்திக்கும் நல்ல ஆற்றலை தேவன் வைத்திருக்கிறார். அந்த சிந்தனைகளை சாத்தான் தவறாக சிந்திக்க வைக்கிறான். கண்களால் பார்ப்பதினாலும், காதுகளினால் கேட்பதாலும் இச்சை உண்டாகிறது. பெலவீனமான நம்முடைய சரீரத்தில் அது பாவம் செய்யத் தூண்டுகிறது. அதைக் குறித்து வேதம் சொல்லுகிறது: **“இச்சையினால் உலகத்தி லுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு, ...” ( 2 பேதுரு. 1:4).**

இச்சைகளுக்கு நாம் தப்பவேண்டும் (விலக வேண்டும்). பரிசுத்த சுபாவம் உண்டாக வேண்டும். கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையும் தேவனால் உண்டானதல்லவென்று வேதம் சொல்லுகிறது. வேதத்தில் பிலேயாம் என்ற தீர்க்கதரிசியைக் குறித்து சொல்லப்பட்டிருக்கிறது. அவன் கூலிக்காக (பணத்துக் காக) தேவ ஜனங்களை சபிக்க புறப்பட்டான். அந்த தீர்க்கதரிசியை மட்டுமல்ல இன்றும் அவனைப் போல பல நபர்களை பரிசுத்தாவியானவர் நமக்கு அடையாளம் காட்டுகிறார். நாம் அவர்களை விட்டு விலக வேண்டும்.

“இவர்களுக்கு ஐயோ! இவர்கள் காயீனுடைய வழியில் நடந்து, பிலேயாம் கூலிக்காகச்செய்த வஞ்சகத்திலே விரைந்தோடி, கோரா எதிர்த்துப்பேசின பாவத்திற்குள்ளாகி, கெட்டுப்போனார்கள்.

இவர்கள் உங்கள் அன்பின் விருந்துகளில் கறை களாயிருந்து, பயமின்றிக் கூட விருந்துண்டு, தங்களைத் தாங்களே மேய்த்துக் கொள்ளுகிறார்கள்; இவர்கள் காற்றுகளால் அடியுண்டோடுகிற தண்ணீரற்ற மேகங்களும், இலையுதிர்ந்து கனியற்று இரண்டுதரஞ் செத்து வேரற்றுப்போன மரங்களும்,

தங்கள் அவமானங்களை நுரை தள்ளுகிற அமளியான கடலலைகளும், மார்க்கந்தப்பி அலைகிற நட்சத்திரங்களுமாயிருக்கிறார்கள்; இவர்களுக்காக என்றென்றைக்கும் காரிருளே வைக்கப்பட்டிருக்கிறது.” (யூதா. 1:11-13.)

“இவர்கள் முறுமுறுக்கிறவர்களும், முறையிடுகிறவர்களும், தங்கள் இச்சைகளின்படி நடக்கிறவர்களுமாயிருக்கிறார்கள்; இவர்களுடைய வாய் இறுமாப்பானவைகளைப் பேசும்; தற்பொழி வுக்காக முகஸ்துதி செய்வார்கள்.” (யூதா 1:16).

“நீங்களோ பிரியமானவர்களே, உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின் மேல் உங்களை உறுதிப் படுத்திக் கொண்டு, பரிசுத்த ஆவிக்குள் ஜெபம் பண்ணி, தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொண்டு, நித்திய ஜீவனுக்கேதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெறக் காத்திருங்கள்.” (யூதா. 1:20,21)

## உ.சாபம்

**''பின்பு அவர் ஆதாமை நோக்கி: நீ உன் மனைவியின் வார்த்தைக்குச் செவி கொடுத்து, புசிக்க வேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தபடியினாலே, பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்; நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனைப் புசிப்பாய்.**

**அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும்;'' (ஆதி. 3:17,18)** என்று தேவன் எச்சரித்தார்.

முதல் மனிதனாகிய ஆதாம் பாவம் செய்த போது பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும் என்று தேவன் சொன்னார். ஆம். இந்த பூமி சபிக்கப்பட்டதாயிருக் கிறது. நாம் சபிக்கப்பட்ட பூமியில் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். சபிக்கப்பட்ட இந்த பூமியிலிருந்து நம்மை விடுவித்து மோட்சத்தில் சேர்க்கும்படியாகவே இயேசு மனிதனாக இந்த உலகத்தில் பிறந்தார்.

இயேசுவின் இரத்தத்தால் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் கழுவப்படாத எந்த மனுஷனானாலும், எந்த மனுஷியானாலும் அவர்கள் சாபத்தில் நிலை கொண்டிருக்கிறார்கள். கர்த்தரின் நியாயத் தீர்ப்புக்கு பங்குள்ளவர்களாக நிலைகொண்டிருக்கிறார்கள். நாம் கட்டாயம் பாவத்திலிருந்தும், பாவத்தால் வரும் கொடிய சாபத்திலிருந்தும் விடுவிக்கப்படவேண்டும்.

எனக்கன்பான சகோதரனே, சகோதரியே, நீ கிறிஸ்தவனாக இருக்கலாம், ஒரு இந்துவாயிருக் கலாம், ஒரு இஸ்லாமியராக இருக்கலாம். உங்கள்

எல்லோரையும் தன் காயப்பட்ட கரங்கள் மூலம் உங்களை இயேசு அழைக்கிறார்.

அன்றைக்கு எரிகோ பட்டணத்தை பிடித்த பின்பு யோசுவாவும் இஸ்ரவேல் ஜனங்களும், ஆயி என்கிற பட்டணத்தைப் பிடிக்க ஆலோசனை பண்ணின பின்பு; **''...ஜனங்கள் எல்லாரும் போகவேண்டியதில்லை; ஏறக்குறைய இரண்டாயிரம் மூவாயிரம்பேர் போய், ஆயியை முறிய அடிக்கலாம்; எல்லா ஜனங்களையும் அங்கே போகும்படி வருத்தப்படுத்தவேண்டியதில்லை; அவர்கள் கொஞ்சம் பேர்தான் என்றார்கள்.**

**அப்படியே ஜனங்களில் ஏறக்குறைய மூவாயிரம் பேர் அவ்விடத்துக்குப் போனார்கள்; ஆனாலும் அவர்கள் ஆயியின் மனுஷருக்கு முன்பாக முறிந்தோடினார்கள். (யோசுவா. 7:3,4)**

யோசுவா கர்த்தருக்கு முன்பாக முகங்குப்புற விழுந்து கிடந்து கர்த்தரை நோக்கி ஜெபம் பண்ணினான்.

**"ஆ, ஆண்டவரே, இஸ்ரவேலர் தங்கள் சத்துருக்களுக்கு முதுகைக் காட்டினார்கள்; இப்பொழுது நான் என்ன சொல்லுவேன்''** என்றான். **(யோசுவா. 7:8)**

**''அப்பொழுது கர்த்தர் யோசுவாவை நோக்கி: எழுந்திரு, நீ இப்படி முகங்குப்புற விழுந்துகிடக்கிறது என்ன?**

**இஸ்ரவேலர் பாவஞ்செய்தார்கள்; நான் அவர்களுக்குக் கட்டளையிட்ட என் உடன்படிக்கையை மீறினார்கள்; சாபத்தீடானதில் எடுத்துக் கொண்டதும்,**

**களவுசெய்ததும், வஞ்சித்ததும், தங்கள் பண்டம் பாடிகளுக்குள்ளே வைத்ததும் உண்டே.**

**ஆதலால் இஸ்ரவேல் புத்திரர் தங்கள் சத்துருக் களுக்கு முன்பாக நிற்கக் கூடாமல், தங்கள் சத்துருக் களுக்கு முதுகைக் காட்டினார்கள்; அவர்கள் சாபத் தீடானார்கள்; நீங்கள் சாபத்தீடானதை உங்கள் நடுவிலிருந்து நிக்கிரகம்பண்ணாவிட்டால், இனி உங்களோடு இரேன்.'' (யோசுவா. 7:10-12) என்றார்.**

எனக்கன்பான சகோதர, சகோதரிகளே! இயேசு சொன்னதைக் கவனியுங்கள்:

**“எப்படியெனில், இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலைபாதகங்களும், விபசாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்ச்சாட்சிகளும், தூஷணங்களும் புறப்பட்டு வரும்.**

**இவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும்;...'' (மத் 15: 19,20) என்று இயேசு சொன்னார்.**

தீட்டானதெல்லாம் சாபத்தைக் கொண்டுவரும். வேதம் சொல்லுகிறது: காயீன் தன் சகோதரனாகிய ஆபேலை கொலை செய்ததினிமித்தம் பாவம் செய்து சாபத்திற் குள்ளானான்.

**“இப்பொழுது உன் சகோதரனுடைய இரத்தத்தை உன் கையிலே வாங்கிக் கொள்ளத் தன் வாயைத் திறந்த இந்தப் பூமியில் நீ சபிக்கப்பட்டிருப்பாய்.'' (ஆதி. 4:11)**

பாருங்கள், தேவன் காயீனை சபித்தார். சாபம் என்பது ஒரு தேசத்தின் மேல் வரும், ஒவ்வொருவருடைய

வாழ்வாதாரத்தின் மேல் வரும். ஒரு தனி மனிதன் மேலும் வரும். ஆம் காயீன் சபிக்கப்பட்டான்!

தேவன் காயீனை நோக்கி: **"நீ நிலத்தைப் பயிரிடும் போது, அது தன் பலனை இனி உனக்குக் கொடாது; நீ பூமியில் நிலையற்று அலைகிறவனாயிருப்பாய் என்றார்." (ஆதி.4:12)** ஆம், சாபம் ஒரு குடும்பத்தில் இருந்தால் அவன் எவ்வளவு பிரயாசப்பட்டாலும் அது பொத்தலான பையில் போட்டது போலவே, வருமானம் காணாமல் போய்விடும். அவன் வாழ்க்கையில் நிலையற்றவனாவான் என்று வேதம் நம்மை எச்சரிக்கிறது.

யோசுவாவும் இஸ்ரவேல் புத்திரரும் கலங்கி நின்ற பொழுது, தேவன் யோசுவாவைப் பார்த்து, இஸ்ரவேல் புத்திரரை நோக்கி:

**"காலையிலே நீங்கள் கோத்திரம் கோத்திரமாக வர வேண்டும்; அப்பொழுது கர்த்தர் குறிக்கிற கோத்திரம் வம்சம் வம்சமாக வரவேண்டும்; கர்த்தர் குறிக்கிற வம்சம் குடும்பம் குடும்பமாக வரவேண்டும்; கர்த்தர் குறிக்கிற குடும்பம் பேர்பேராக வரவேண்டும் என்று சொல்.**

**அப்பொழுது சாபத்தீடானதை எடுத்தவனாய்க் கண்டுபிடிக்கப்படுகிறவன், கர்த்தரின் உடன்படிக் கையை மீறி, இஸ்ரவேலிலே மதிகேடான காரியத்தைச் செய்தபடியினால், அவனும் அவனுக்குள்ளயாவும் அக்கினியில் சுட்டெரிக்கப்படக் கடவது என்றார்.**

**யோசுவா அதிகாலமே எழுந்திருந்து, இஸ்ர வேலரைக் கோத்திரம் கோத்திரமாக வரப்பண்ணினான்; அப்பொழுது, யூதாவின் கோத்திரம் குறிக்கப்பட்டது.**

அவன் யூதாவின் வம்சங்களை வரப்பண்ணின போது, சேராகியரின் வம்சம் குறிக்கப்பட்டது; அவன் சேராகியரின் வம்சத்தைப் பேர்பேராக வரப்பண்ணின போது, சப்தி குறிக்கப்பட்டான்.

அவன் வீட்டாரை அவன் பேர்பேராக வரப்பண்ணின போது, யூதா கோத்திரத்துச் சேராகின் குமாரனாகிய சப்திக்குப் பிறந்த கர்மீயின் மகன் ஆகான் குறிக்கப் பட்டான்.

அப்பொழுது யோசுவா ஆகானை நோக்கி: மகனே, நீ இப்பொழுது இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை மகிமைப்படுத்து, அவருக்கு முன்பாக அறிக்கை பண்ணி, நீ செய்ததை எனக்குச் சொல்லு; அதை எனக்கு ஒளிக்காதே என்றான்.

அப்பொழுது ஆகான் யோசுவாவுக்குப் பிரதி யுத்தரமாக: மெய்யாகவே நான் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ் செய்தேன்; இன்னின்ன பிரகாரமாகச் செய்தேன்.

கொள்ளையிலே நேர்த்தியான ஒரு பாபிலோனிய சால்வையையும், இருநூறு வெள்ளிச்சேக்கலையும், ஐம்பது சேக்கல் நிறையான ஒரு பொன்பாளத்தையும் நான் கண்டு, அவைகளை இச்சித்து எடுத்துக் கொண்டேன்; இதோ, அவைகள் என் கூடாரத்தின் மத்தியில் பூமிக்குள் புதைத்திருக்கிறது, வெள்ளி அதின் அடியிலிருக்கிறது என்றான்.

உடனே யோசுவா ஆட்களை அனுப்பினான்; அவர்கள் கூடாரத்துக்கு ஓடினார்கள்; அவனுடைய கூடாரத்தில் அது புதைத்திருந்தது, வெள்ளியும் அதின் கீழ் இருந்தது.

**அவைகளைக் கூடாரத்தின் மத்தியிலிருந்து எடுத்து, யோசுவாவினிடத்திலும் இஸ்ரவேல் புத்திரர் எல்லாரிடத் திலும் கொண்டுவந்து, கர்த்தருடைய சமூகத்தில் வைத்தார்கள்.**

**அப்பொழுது யோசுவாவும் இஸ்ரவேலரெல்லாருங் கூடச் சேராகின் புத்திரனாகிய ஆகானையும், அந்த வெள்ளியையும் சால்வையையும் பொன்பாளத்தையும், அவன் குமாரரையும் குமாரத்திகளையும், அவன் மாடுகளையும் கழுதைகளையும் ஆடுகளையும், அவன் கூடாரத்தையும், அவனுக்குள்ள யாவையும் எடுத்து, ஆகோர் பள்ளத்தாக்குக்குக் கொண்டுபோனார்கள்.**

**அங்கே யோசுவா: நீ எங்களைக் கலங்கப்பண்ணின தென்ன? இன்று கர்த்தர் உன்னைக் கலங்கப்பண்ணுவார் என்றான்; அப்பொழுது இஸ்ரவேலரெல்லாரும் அவன் மேல் கல்லெறிந்து, அவைகளை அக்கினியில் சுட்டெரித்து, கற்களினால் மூடி;**

**அவன் மேல் இந்நாள்வரைக்கும் இருக்கிற பெரிய கற்குவியலைக் குவித்தார்கள்; இப்படியே கர்த்தர் தமது கோபத்தின் உக்கிரத்ததை விட்டு மாறினார்; ஆகையால் அவ்விடம் இந்நாள்வரைக்கும் ஆகோர் பள்ளத்தாக்கு என்னப்படும்." (யோசுவா.7:14-26)**

தேவன் நல்லவர்தான், மனதுருக்கம் உள்ளவர்தான். ஆனாலும் அவரிடம் ஏமாற்ற முடியாது. கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக்கிறது. ஒரு வேளை ஆகான் தான் செய்த தவறை யாரும் காணமுடியாது என்று நினைத்திருப்பான். தேவன் இருளிலே பிரகாசிக்கிறவர். அவருக்கு முன்பாக சகலமும் வெளியரங்கமாகவும், நிர்வாணமாகவும் இருக்கிறது. அவரிடம் எதையும் மறைக்க முடியாது.

**யோசுவா ஆகானிடம் சொன்னதை கவனித்துப் பாருங்கள்: "...மகனே, நீ இப்பொழுது இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை மகிமைப்படுத்து,..."**
**(யோசுவா. 7:19)**

ஆம், தேவன் ஒருவரே மகிமைப்படத்தக்கவர், சகலமும் அவர் மூலமாய் அவருக்கென்றே உண்டாக்கப்பட்டிருக்கிறது. அவருக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை.

**''இஸ்ரவேல் சித்தீமிலே தங்கியிருக்கையில், ஜனங்கள் மோவாபின் குமாரத்திகளோடே வேசித்தனம் பண்ணத் தொடங்கினார்கள்.**

**அவர்கள் தங்கள் தேவர்களுக்கு இட்ட பலிகளை விருந்துண்ணும்படி ஜனங்களை அழைத்தார்கள்; ஜனங்கள் போய்ப் புசித்து, அவர்கள் தேவர்களைப் பணிந்து கொண்டார்கள்.**

**இப்படி இஸ்ரவேலர் பாகால்பேயோரைப் பற்றிக் கொண்டார்கள்; அதனால் இஸ்ரவேலர்மேல் கர்த்தருடைய கோபம் மூண்டது.**

**கர்த்தர் மோசேயை நோக்கி: கர்த்தருடைய உக்கிரமான கோபம் இஸ்ரவேலை விட்டு நீங்கும்படி நீ ஜனங்களின் தலைவர் எல்லாரையும் கூட்டிக்கொண்டு, அப்படிச் செய்தவர்களைச் சூரியனுக்கு எதிரே கர்த்தருடைய சந்நிதானத்தில் தூக்கிப்போடும்படி செய் என்றார்.**

**அப்படியே மோசே இஸ்ரவேலின் நியாயாதி பதிகளை நோக்கி: நீங்கள் அவரவர் பாகால்பேயோரைப் பற்றிக்கொண்ட உங்கள் மனிதரைக் கொன்று போடுங்கள் என்றான்.**

**அப்பொழுது மோசேயும் இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் அனைவரும் ஆசரிப்புக் கூடாரவாசலுக்கு முன்பாக அழுதுகொண்டு நிற்கையில், அவர்கள் கண்களுக்கு முன்பாக இஸ்ரவேல் புத்திரரில் ஒருவன் ஒரு மீதியானிய ஸ்திரீயைத் தன் சகோதரரிடத்திலே அழைத்துக் கொண்டு வந்தான்.**

**அதை ஆசாரியனாகிய ஆரோனின் குமாரனான எலெயாசாரின் மகன் பினெகாஸ் கண்டபோது, அவன் நடுச்சபையிலிருந்து எழுந்து, ஒரு ஈட்டியைத் தன் கையிலே பிடித்து,**

**இஸ்ரவேலனாகிய அந்த மனிதன் வேசித்தனம் பண்ணும் அறையிலே அவன் பின்னாலே போய், இஸ்ரவேல் மனிதனும் அந்த ஸ்திரீயுமாகிய இருவருடைய வயிற்றிலும் ஈட்டி உருவிப்போக அவர்களைக் குத்திப்போட்டான்; அப்பொழுது இஸ்ரவேல் புத்திரரில் உண்டான வாதை நின்று போயிற்று.**

**அந்த வாதையால் செத்தவர்கள் இருபத்து நாலாயிரம் பேர். (எண். 25:1-9)**

ஆம், தேவ கோபத்தினால் வரும் சாபம் பயங்கர மானது. தாவீதின் வாழ்க்கையில் நடந்த சம்பவத்தைப் பாருங்கள். தாவீது தேவனால் அபிஷேகம் பெற்ற ராஜா. தேவனுக்காக வைராக்கியமாய் வாழ்ந்தவன். ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்த அவனை தேவன் தன் ஜனங்களை ஆளும் இராஜாவாக ஏற்படுத்தினார்.

பெலிஸ்திய படை வீரனான பெரிய இராட்சஷனான கோலியாத்தை வீழ்த்திய சிறுவன் என்று பேர் பெற்றவன். தேவனுக்காக எப்பொழுதும் தன்னுடைய

இசைக்கருவியை இசைத்து, தேவனை மகிமைப்படுத்தி துதித்துக்கொண்டேயிருந்தவன். தாவீது என் இருதயத்துக்கு ஏற்றவன் என்று தேவனால் புகழப் பட்டவன். கர்த்தருக்காக பல யுத்தங்களை நடத்தி ராஜ்யங்களையும், பட்டணங்களையும் பிடித்தவன்.

**‘‘தாவீது சணல்நூல் ஏபோத்தைத் தரித்துக் கொண்டு, தன் முழுப் பலத்தோடும் கர்த்தருக்கு முன்பாக நடனம் பண்ணினான்.’’ (2 சாமு 6:14)** என்று வேதம் சொல்லுகிறது.

உன் முழு இருதயத்தோடும், முழு பலத்தோடும், முழு மனதோடும் அன்பு கூறுவாயாக என்ற வேத வசனத்திற்குட்பட்டு தேவனுக்குப் பிரியமாய் நடந்தவன். கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை ஒபேத் ஏதோமீன் வீட்டிலிருந்து கொண்டு வந்து, அதற்கு தாவீது போட்டிருந்த கூடாரத்திற்குள் அதன் ஸ்தானத்திலே வைத்து தகன பலிகளையும், சமாதான பலிகளையும் செலுத்தி இஸ்ரவேல் ஜனங்களை ஆசீர்வதித்து திரும்பின பின்:

**‘‘தாவீது தன் வீட்டாரை ஆசீர்வதிக்கிறதற்குத் திரும்பும்போது, சவுலின் குமாரத்தியாகிய மீகாள் தாவீதுக்கு எதிர்கொண்டுவந்து, அற்பமனுஷரில் ஒருவன் தன் வஸ்திரங்களைக் கழற்றிப்போடுகிறது போல, இன்று தம்முடைய ஊழியக்காரருடைய பெண்களின் கண்களுக்கு முன்பாகத் தம்முடைய வஸ்திரங்களை உரிந்துபோட்டிருந்த இஸ்ரவேலின் ராஜா இன்று எத்தனை மகிமைப்பட்டிருந்தார் என்றாள்.**

**அதற்குத் தாவீது மீகாளைப் பார்த்து: உன் தகப்பனைப் பார்க்கிலும், அவருடைய எல்லா வீட்டாரைப்பார்க்கிலும்,**

**என்னை இஸ்ரவேலாகிய கர்த்தருடைய ஜனத்தின்மேல் தலைவனாகக் கட்டளையிடும்படிக்குத் தெரிந்து கொண்ட கர்த்தருடைய சமூகத்திற்கு முன்பாக ஆடிப் பாடினேன்.**

**இதைப்பார்க்கிலும் இன்னும் நான் நீசனும் என் பார்வைக்கு அற்பனுமாவேன்: அப்படியே நீ சொன்ன பெண்களுக்குங்கூட மகிமையாய் விளங்குவேன் என்றான்.**

**அதினால் சவுலின் குமாரத்தியாகிய மீகாளுக்கு மரணமடையும் நாள்மட்டும் பிள்ளை இல்லாதிருந்தது'. (2 சாமு. 6:20-23)**

தாவீதை அவமதித்தது கர்த்தரை அவமதித்ததற்குச் சமம். கர்த்தர் மீகாள் மேல் கோபமானார். மரண மடையுமளவும், குழந்தை பெறாதபடி கர்ப்பத்தை அடைத்தார்.

பிரியமான கர்த்தருடைய பிள்ளைகளே! நாம் ஏன் சபிக்கப்படவேண்டும்? தாவீதின் வாழ்க்கை கர்த்தருக்குப் பிரியமாயிருந்தாலும் தன் இராணுவத்தில் இருந்த போர்ச்சேவகன் மனைவியை இச்சித்து எடுத்துக் கொண்டதினால் அவன் செய்த பாவத்தை உணர்த்த கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசியாகிய நாத்தானைத் தாவீதினிடத்தில் அனுப்பினார். அப்பொழுது நாத்தான் தாவீதை நோக்கி:

**"உன் ஆண்டவனுடைய வீட்டை உனக்குக் கொடுத்து, உன் ஆண்டவனுடைய ஸ்திரீகளையும் உன் மடியிலே தந்து, இஸ்ரவேல் வம்சத்தையும், யூதா வம்சத்தையும் உனக்குக் கையளித்தேன்; இது போதாதிருந்தால் இன்னும் உனக்கு வேண்டியதைத்தருவேன்.**

**கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பான இந்தக் காரியத்தைச் செய்து, அவருடைய வார்த்தையை நீ அசட்டை பண்ணினது என்ன? ஏத்தியனாகிய உரியாவை நீ பட்டயத்தால் மடிவித்து, அவன் மனைவியை உனக்கு மனைவியாக எடுத்துக்கொண்டு, அவனை அம்மோன் புத்திரரின் பட்டயத்தாலே கொன்று போட்டாய்.**

**இப்போதும் நீ என்னை அசட்டைபண்ணி, ஏத்திய னாகிய உரியாவின் மனைவியை உனக்கு மனைவியாக எடுத்துக்கொண்டபடியினால், பட்டயம் என்றைக்கும் உன் வீட்டைவிட்டு விலகாதிருக்கும்.**

**கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், இதோ, நான் உன் வீட்டிலே பொல்லாப்பை உன் மேல் எழும்பப்பண்ணி, உன் கண்கள் பார்க்க, உன் ஸ்திரீகளை எடுத்து, உனக்கு அடுத்தவனுக்குக் கொடுப்பேன்; அவன் இந்தச் சூரியனுடைய வெளிச்சத்திலே உன் ஸ்திரீகளோடே சயனிப்பான்.**

**நீ ஒளிப்பிடத்தில் அதைச் செய்தாய்; நானோ இந்தக் காரியத்தை இஸ்ரவேலர் எல்லாருக்கு முன்பாகவும், சூரியனுக்கு முன்பாகவும் செய்விப்பேன் என்றார் என்று சொன்னான்." (2 சாமு. 12:8-12)**

எனக்கன்பான சகோதரனே, சகோதரியே கர்த்தரிடத்தில் பட்சபாதம் கிடையாது. ஒரு வேளை நீங்கள் ஒரு ஊழியக்காரராக இருக்கலாம், ஒரு விசுவாசியாக இருக்கலாம், நீங்கள் நிறைய ஊழியங்களுக்கு காணிக்கை கொடுக்கிறவர்களாயிருக்கலாம், பல சபைகளைக் கட்டி கொடுத்தவர்களாயிருக்கலாம், அதற் குறிய பலன்களை இந்தப் பூமியிலே வாழும் நாட்கள் மட்டும் நீங்கள் பெற்று அனுபவிக்கலாம். பணம், பொருள், வீடு வாசல்களை சம்பாதிக்கலாம்.

ஆனால் வியாதி, துன்பம், கவலை, துக்கம், பிரச்சனைகள் இருந்து கொண்டேதான் இருக்கும். கலக்கமும், வேதனைகளும் பெருகிக்கொண்டேதான் இருக்கும் என்பதை நினைவில் கொள்ளும்படி பரிசுத்த ஆவியானவர் எச்சரிக்கிறார். வேதத்திலே யோபுவின் புஸ்தகத்தில் யோபு சொல்வதைக் கவனியுங்கள்:

**"என் கண்களோடே உடன்படிக்கைபண்ணின நான் ஒரு கன்னிகையின் மேல் நினைப்பாயிருப்பதெப்படி?**

**அப்பொழுது உன்னதங்களிலிருந்து தேவன் அளிக்கும் பங்கும், உன்னதத்திலிருந்து சர்வவல்லவர் கொடுக்கும் சுதந்தரமும் கிடைக்குமோ?" (யோபு. 31:1,2)**

**"என் மனம் யாதொரு ஸ்திரீயின் மேல் மயங்கி, அயலானுடைய வாசலை நான் எட்டிப்பார்த்த துண்டானால்,**

**அப்பொழுது என் மனைவி வேறொருவனுக்கு மாவரைப்பாளாக; வேற்றுமனிதர் அவள்மேல் சாய்வார்களாக. (யோபு. 31:9,10)**

**"தேவன் எழும்பும்போது, நான் என்னசெய்வேன்; அவர் விசாரிக்கும்போது, நான் அவருக்கு என்ன மறு உத்தரவு சொல்லுவேன்". (யோபு. 31:14)**

யோபு பாவங்களையும் அதின் கொடூரத்தின் வல்லமைகளையும் குறித்து உணர்ந்தவராக இப்படிச் சொல்லுகிறார். பிரியமானவர்களே, **"பாவத்தின் சம்பளம் மரணம்;" (ரோமர் 6:23)** என்று வேதம் சொல்கிறது. இந்தப் பயங்கரமான பரலோக தீர்ப்புக்கு தப்ப வேண்டுமானால், காயப்பட்ட இரு கரங்களையும் நீட்டும் இயேசுவிடம் வாருங்கள். நாட்கள் பொல்லாதவைகள், ஆகையால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்.

வேதம் நம்மை எச்சரிக்கிறது. இது நமக்கு அவசரமும் அவசியமுமாயிருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் மட்டுமே பாவங்களை மன்னிக்க வல்லமையுள்ளது. **''...அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்.'' (1பேதுரு.2:24) "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்." (மத்.11:28)** என்று இயேசு உங்களை அழைக்கிறார்.

# 3.நியாயத் தீர்ப்பு

**"சாத்தான் இஸ்ரவேலுக்கு விரோதமாய் எழும்பி, இஸ்ரவேலைத் தொகையிடுகிறதற்குத் தாவீதை ஏவி விட்டது. (I. நாளா. 21:1)**

தாவீது ராஜாவுக்குள் பெருமையின் ஆவி புகுந்து தேவனுக்கு விரோதமாய் செயல்படத்தூண்டியது. கர்த்தர் தம்மால் தெரிந்து கொள்ளப்பட்ட தம்முடைய ஜனங்களை ஆட்சி செய்வதற்குத்தான் தாவீதை தெரிந்தெடுத்து ராஜாவாக்கினார். ஆனால் தாவீதோ இஸ்ரவேல் கோத்திரமும், யூதா கோத்திரமும் தன் பெலத்தினாலும், பராக்கிரமத்தாலும் சம்பாதித்த ஜனங்கள் என்ற பெருமை அவனை ஆட்டிப்படைத்தது.

இப்படித்தான் இன்றைக்கும் கர்த்தருடைய பிள்ளைகள், இந்த உலகத்தில் குடியிருக்கும் நாள் வரைக்கும் நாம் அனுபவிக்க கர்த்தர் கொடுத்த உணவு, உடை, வீடு வாசல், நிலபுலன்கள், கல்வி, பதவி அதிகாரங்களான இவைகள் தன்னுடைய திறமையினால் சம்பாதித்துக் கொண்டவைகள் என்று தங்கள் இருதயங்களில் பெருமை கொள்ளுகிறார்கள். (இது ஊழியக்காரர் களுக்கும் பொருந்தும்) இது தேவன் நமக்கு இலவசமாய் அருளிய ஈவு.

**"அதாவது, ஒருவனுக்குத் தேவன் செல்வத்தையும் சம்பத்தையும் கனத்தையும் கொடுக்கிறார்; அவன் என்ன இச்சித்தாலும் அதெல்லாம் அவனுக்குக் குறை வில்லாமல் கிடைக்கும்; ஆனாலும் அவைகளை அனுபவிக்கும் சக்தியைத் தேவன் அவனுக்குக் கொடுக்க வில்லை; அந்நிய மனுஷன் அதை அனுபவிக்கிறான்; இதுவும் மாயையும், கொடிய நோயுமானது." (பிர.6:2)**

தேவன் கொடுத்த இந்த ஆசீர்வாதங்களை தவறாக செலவழிக்க, அனுபவிக்க நமக்கு அதிகாரமில்லை. தேவனே அதற்கு அதிகாரி. இன்றைக்கு அனேகர் மதுபானம் குடிக்கவும், வேசித்தனம் பண்ணவும் கண்களில் கண்ட பொருள்களை வாங்கவும், தேவையில்லாத உணவுகளை இச்சித்து அவைகளை உண்டு, வியாதியினால் பாதிக்கப்படுகிறார்கள். இது தேவனுக்கு விரோதமானவை.

தேவன் கொடுத்த பணத்தினாலும், செல்வத்தினாலும் நாம் தேவ ராஜ்யத்தைக் கட்டவேண்டும். தேவன் கொடுத்த ஞானத்தினால் சுவிசேஷ வேலைகளைச் செய்யவேண்டும். நீ பெற்றுக்கொண்ட இரட்சிப்பை பிறருக்குச் சொல்லவேண்டும். தேவன் ஒருநாள் உன்னிடம் கணக்கு கேட்பார். அன்றைக்கு நீ என்ன சொல்லுவாய்? இதுவே நித்திய மகிழ்ச்சி. இதற்காகவே இந்த ஆசீர்வாதங்களை உனக்குச் கொடுத்தார். பாருங்கள் தாவீதுக்குள் பெருமையின் ஆவி புகுந்து அவனை ஏவத் துவங்கியது.

**‘‘அப்பொழுது யோவாப் ராஜாவைப் பார்த்து: ராஜாவாகிய என் ஆண்டவனுடைய கண்கள் காணும்படி உம்முடைய தேவனாகிய கர்த்தர் ஜனங்களை இப்பொழுது இருக்கிறதைப்பார்க்கிலும், நூறுமடங்கு அதிகமாய் வர்த்திக்கப்பண்ணுவாராக; ஆனாலும் என் ஆண்டவனாகிய ராஜா இந்தக் காரியத்தை விரும்புகிறது என்ன என்றான்.**

**ஆகிலும் யோவாபும் இராணுவத்தலைவரும் சொன்ன வார்த்தை செல்லாதபடிக்கு, ராஜாவின் வார்த்தை பலத்தது;... (2 சாமு. 24:3,4)**

**‘‘யோவாப் ஜனத்தை இலக்கம் பார்த்த தொகையை ராஜாவுக்குக் கொடுத்தான்; இஸ்ரவேலிலே பட்டயம்**

**உருவத்தக்க யுத்தசேவகர் எட்டுலட்சம் பேர் இருந்தார்கள்; யூதா மனுஷர் ஐந்துலட்சம் பேர் இருந்தார்கள்." (2 சாமு. 24:9)**

தாவீதின் எண்ணமெல்லாம் தன்னுடைய யூதா கோத்திர மனுஷர்களுக்கும், இஸ்ரவேல் கோத்திர மனுஷர்களுக்கும் எண்ணிக்கையில் எவ்வளவு வித்தியாசம் உள்ளது என்பதை கண்டுபிடிப்பதுதான். ஒருவேளை இஸ்ரவேல் ஜனங்கள் தன்னுடைய இராஜ்யத்துக்கு விரோதமாய் கலகம் பண்ணி பிரிந்தால், தனக்கு ஆதரவான யூதா ஜனங்கள் மூலம் ஆட்சியை தக்க வைத்துக் கொள்ளலாம் என்கிற மனுஷீகமான யோசனையினால் சாத்தான் தாவீதின் இருதயத்தை நிரப்பினான்.

**"இவ்விதமாய் ஜனங்களை எண்ணின பின்பு, ராஜாவின் இருதயம் அவனை வாதித்தது; அப்பொழுது தாவீது கர்த்தரை நோக்கி: நான் இப்படிச் செய்ததினாலே பெரிய பாவஞ்செய்தேன்; இப்போதும் ஆண்டவரே, உமது அடியானின் அக்கிரமத்தை நீக்கிவிடும்; நான் மகா புத்தியீனமாய்ச் செய்தேன் என்றான்." (2 சாமு. 24:10)**

தாவீது தன் பாவங்களை அறிக்கை செய்தான். ஆனாலும் அவன் கர்த்தருக்கு விரோதமாய் எழும்பிச் செய்த துணிகரத்துக்கு தக்க தண்டனையை உறுதிப் படுத்தி கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசியின் மூலம் வரும் நியாயத்தீர்ப்பை தெரிவித்தார்.

**"தாவீது காலமே எழுந்திருந்தபோது, தாவீதின் ஞான திருஷ்டிக்காரனாகிய காத் என்னும் தீர்க்கதரிசிக்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டாகிச் சொன்னது:**

**நீ தாவீதினிடத்தில் போய், மூன்று காரியங்களை உனக்கு முன்பாக வைக்கிறேன்; அவைகளில் ஒரு காரியத்தைத் தெரிந்துகொள், அதை நான் உனக்குச் செய்வேன் என்று கர்த்தர் உரைக்கிறார் என்று சொல் என்றார்.**

**அப்படியே காத் தாவீதினிடத்தில் வந்து, அவனை நோக்கி: உம்முடைய தேசத்திலே ஏழு வருஷம் பஞ்சம் வரவேண்டுமோ? அல்லது மூன்றுமாதம் உம்முடைய சத்துருக்கள் உம்மைப் பின்தொடர, நீர் அவர்களுக்கு முன்பாக ஓடிப்போகவேண்டுமோ? அல்லது உம்முடைய தேசத்திலே மூன்றுநாள் கொள்ளைநோய் உண்டாக வேண்டுமோ? இப்போதும் என்னை அனுப்பினவருக்கு நான் என்ன மறுஉத்தரவு கொண்டுபோகவேண்டும் என்பதை நீர் யோசித்துப் பாரும் என்று சொன்னான்.**

**அப்பொழுது தாவீது காத்தை நோக்கி: கொடிய இடுக்கணில் அகப்பட்டிருக்கிறேன்; இப்போது நாம் கர்த்தருடைய கையிலே விழுவோமாக; அவருடைய இரக்கங்கள் மகா பெரியது; மனுஷர் கையிலே விழாதிருப்பேனாக என்றான். (2 சாமு.24:11-14)**

இப்பொழுதுதான் தாவீதுக்கு புத்தி தெளிந்து, சாத்தானின் பிடியிலிருந்து விலகி, கர்த்தரை நோக்கினான். கெட்ட குமாரனுக்கு புத்தி வந்து,

**“இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப் படுவதற்கு நான் பாத்திரனல்ல, உம்முடைய கூலிக் காரரில் ஒருவனாக என்னை வைத்துக்கொள்ளும் என்பேன் என்று சொல்லி; எழுந்து புறப்பட்டு, தன் தகப்பனிடத்தில் வந்தான்.” (லூக்கா. 15:19,20) அதைப் போல இப்பொழுதுதான் தாவீதுக்கு புத்தி தெளிந்தது.**

**‘‘அப்பொழுது கர்த்தர் இஸ்ரவேலிலே, அன்று காலமே தொடங்கிக்குறித்த காலம் வரைக்கும் கொள்ளை நோயை வரப்பண்ணினார்; அதினால் தாண் முதல் பெயெர்செபா மட்டுமுள்ள ஜனங்களில் எழுபதினாயிரம்பேர் செத்துப் போனார்கள்.**

**தேவதூதன் எருசலேமை அழிக்கத் தன் கையை அதின்மேல் நீட்டினபோது, கர்த்தர் அந்தத் தீங்குக்கு மனஸ்தாபப்பட்டு, ஜனங்களைச் சங்கரிக்கிற தூதனை நோக்கி: போதும், இப்போது உன் கையை நிறுத்து என்றார்; அந்த வேளையில் கர்த்தருடைய தூதன் எபூசியனாகிய அர்வனாவின் போரடிக்கிற களத்திற்கு நேரே இருந்தான்.**

**ஜனத்தை உபாதிக்கிற தூதனை தாவீது கண்டபோது, அவன் கர்த்தரை நோக்கி: இதோ, நான்தான் பாவஞ் செய்தேன்; நான்தான் அக்கிரமம்பண்ணினேன்; இந்த ஆடுகள் என்னசெய்தது? உம்முடைய கை எனக்கும் என் தகப்பன் வீட்டுக்கும் விரோதமாயிருப்பதாக என்று விண்ணப்பம் பண்ணினான். (2 சாமு. 24:15-17)**

**“அங்கே தாவீது கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி, சர்வாங்க தகனபலிகளையும் சமாதான பலிகளையும் செலுத்தினான்; அப்பொழுது கர்த்தர் தேசத்துக்காகச் செய்யப்பட்ட வேண்டுதலைக் கேட்டருளினார்; இஸ்ரவேலின்மேலிருந்த அந்த வாதை நிறுத்தப்பட்டது.” (2சாமு. 24:25)**

பாவிகளுக்கு தேவன் செவி கொடுப்பதில்லையென்று வேதம் தெளிவாய்ச் சொல்லுகிறது. அன்று தேசத்தின் அக்கிரமங்களை நீக்கி சுத்திகரிக்க கோபாக்கினையான நியாயத்தீர்ப்பை தமது ஜனங்கள் மேல் கொண்டு வந்தார்.

இப்பொழுது ஆவிக்குரிய காலமாயிருப்பதால் நீங்கள் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாக, **”அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக் கிறீர்கள்; அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக் கல்லாயிருக்கிறார்;”.**

**“அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள்.” (எபே. 2:20-22) என்று வேதம் சொல்லுகிறது,**

**மேலும் “நாம் அவருடைய சரீரத்தின் அவயவங் களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம்.” (எபே. 5:30)** என்று பரிசுத்த ஆவியானவர் நமக்கு கற்றுக் கொடுக்கிறார். ஆகையால், இயேசு கிறிஸ்து தலையாகவும், நாம் அவருடைய சரீரத்திலுள்ள அனைத்து உறுப்புகளாகவும் இருக்கிறோம். நம்முடைய ஒவ்வொரு உறுப்புகளும் அதினதின் வேலையை தாமே செய்கிறதுபோல நாமும் தலையாகிய இயேசுகிறிஸ்துவில் இணைந்து அவருடைய சரீரத்தின் உறுப்புகளாகிய நாம் ஒவ்வொருவரும் பிதாவின் சித்தம் செய்யவேண்டும். நம்முடைய கண்கள், காதுகள், கைகள், கால்கள் மற்றுமுள்ள அனைத்து உறுப்புகளும் தம் தம் வேலையை நம்முடைய எண்ணங்கள், சிந்தனைகள் மூலமாக இயங்குகிறது போல, இயேசுகிறிஸ்துவின் எண்ணங்கள் சிந்தனைகள் பரிசுத்த ஆவியானவர் மூலமாக நமக்குள் வைக்கப்பட்டு, அவருடைய சரீரத்தின் உறுப்புகளாக நாம் இயக்கப்படுகிறோம். எப்படி நம்முடைய சிந்தனை மண்டலத்திலிருந்து நம்முடைய சரீர உறுப்புகளுக்கு தம் தம் வேலைகளைச் செய்ய விருப்பங்களும், செய்கைகளும் உண்டாகிறதோ, இதைப் போலவே இயேசுகிறிஸ்துவை தலையாக பற்றிக் கொண்டிருக்கிற ஒவ்வொரு

விசுவாசியும் உலக காரியங்களில் அதிக நாட்ட மில்லாமலும், இயேசுகிறிஸ்துவின் மேல் அன்புள்ளவ னாகவும், நன்றியுள்ளவனாகவும் இருப்பான் (இருப்பாள்). பரலோகத்தின் வேலையை செய்ய அவன் (அவள்) இருதயம் தாகமாயிருக்கும்.

இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் ஊழியம் செய்த நாட்களில் பிதாவின் சித்தத்தை மட்டுமே செய்தார். இயேசு சொன்னார். "**நான் என் சுயமாய் ஒன்றுஞ் செய்கிறதில்லை; ..." (யோவான். 5:30)**

**"என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பின வருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்தி லிருந்திறங்கிவந்தேன்." (யோவான். 6:38) என்று சொன்னார்.**

நான் அவரைப் பின்பற்றுகிறேன், நான் அவருடைய ஊழியக்காரன் என்று நாம் சொல்லுவோமானால், அவரைப்போலவே நாமும் இந்த உலகத்தில் வாழும் நாள் வரை ஜீவிக்கவேண்டும். அதுவே உண்மையான கிறிஸ்தவ ஜீவியம்.

இயேசு பாவிகளைக் கண்டு மனதுருகினார். பிறவிச் சப்பாணிகள், பிறவிக் குருடர்கள், செவிடர்கள், ஊமையர்கள் மற்றும் சகலவித நோயாளிகளையும் பார்க்கும்போது, தன் பிதா மனிதர்களை இவ்விதமாய் சிருஷ்டிக்கவில்லையே, மனிதர்கள் தங்களைத் தாங்களே கெடுத்துக்கொண்டார்களே என்று பரி தவித்தார். முன்னோர்கள் செய்த பாவத்தினால் சாபம் அவர்களை ஆண்டுகொண்டதே என்று வேதனைப் பட்டார்.

எனக்கன்பான சகோதரனே, சகோதரியே உங்களுக்குள் இவ்விதமான வேதனை உண்டா? இயேசுவை ஏற்றுக்கொண்ட பின்பு பின் வாங்கிப்போன ஆத்துமாக்கள் மேல் உங்களுக்கு கரிசனை உண்டா? அந்த ஆத்துமாக்களைத் தேடிப் போவீர்களா? **இயேசு: நான் காணாமல் போன ஆடுகளையே தேடி வந்தேன் என்றார்.**

நீங்கள் பிறவியிலே ஊனமாய்ப் பிறந்தவர்களைக் கண்டு பரிதவிக்கிறீர்களா? அல்லது பரிகசிக்கிறீர்களா? ஆம், இயேசு மனதுருகினார். பிதாவானவர் சீர் கெட்டுப் போன மனுஷ சந்ததியைப் பாவத்திலிருந்து மீட்டெடுத்து தன்னுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் தன்னுடன் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று இயேசுவை இந்த உலகத்திற்கு அனுப்பினார்.

இயேசு நூறு சதவிகிதம் மனிதனாகவும், நூறு சதவிகிதம் தேவனாகவும் இருந்தபடியால் மனிதனுக்குரிய சரீர வேதனை, ஆவியிலே உண்டாகும் கலக்கமும் பயமும் நிறைந்தவராய் சிலுவை மரணத்தை நோக்கிக் கடந்து சென்றார். அவருடைய சிலுவை மரணம்தான் நாம் ஆசீர்வதிக்கப்பட இலவசமாக பிதாவினால் பரலோகத்திலிருந்து இயேசுவின் மூலம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நினைத்து தேவனை மகிமைப்படுத்தவேண்டும்.

**"பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்..." (1தீமோ. 1:15).**

பாவத்தினாலே வேதனையடைந்து, நான் செய்த பாவத்தினால் என் சரீரம் நோய் வாய்ப்பட்டிருக்கிறதே என்று உணர்ந்து அதற்கு பரிகாரம் தேடுகிற ஒவ்வொருவருக்கும் இயேசு அழைப்பு கொடுக்கிறார்.

என்னிடத்தில் வருகிறவனை புறம்பே தள்ளுகிறதில்லை, நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன் என்கிறார். தன் காயப்பட்ட இரு கரங்களையும் நீட்டி என்னிடம் வா என்று நம் ஒவ்வொருவரையும் அழைக்கிறார். நாம் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் சாத்தானின் அதிகார பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்திற்குட்படும்போது சாத்தான் நம்மைவிட்டு ஓடிப்போகிறான். பிதாவானவர் தன் சொந்தக்குமாரனாகிய இயேசுகிறிஸ்துவுக்கு உலகம், மாமிசம், பிசாசின் மேல் கொடுத்த சகல அதிகாரங் களும் நமக்குள் வந்துவிடுகிறது. இப்பொழுது இயேசு கிறிஸ்துவுக்குள்ளாக நாம் ஒரே சரீரமாக இணைக்கப் படுகிறோம்,

இயேசு சொன்னார்: **“நானே திராட்சச் செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது.**

**ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப் போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான்; அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள்; அவைகள் எரிந்துபோம்.” (யோவான். 15:5,6) என்றார்.**

இயேசு சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்தபொழுது, உலகத்திலுள்ள நம் ஒவ்வொருவர் மேலும் வர வேண்டிய நியாயத்தீர்ப்பாகிய தமது கோபத்தின் அக்கினியை பிதாவானவர் தமது சொந்தக் குமார னென்றும் பாராமல் அவர்மேல் சொரியப்பண்ணினார். அதன் மூலமாக பரிசுத்தமாய் வாழ முடியாத நம்முடைய பெலவீனங்களை தமது சரீரத்திலே சிலுவையின் மேல் சுமந்தார்.

**“அவர் அசட்டைபண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அனுபவித்தவருமாயிருந்தார்; ...”**

**“மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக் கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; ...” (ஏசா. 53:3,4)**

**“...கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்.” (ஏசா. 53:6)**

**‘‘...ஜீவனுள்ளோருடைய தேசத்திலிருந்து அறுப்புண்டு போனார்; என் ஜனத்தின் மீறுதலினிமித்தம் அவர் வாதிக்கப்பட்டார்.” (ஏசா. 53:8)**

**“துன்மார்க்கரோடே அவருடைய பிரேதக்குழியை நியமித்தார்கள்; ஆனாலும், அவர் மரித்தபோது ஐசுவரியவானோடே இருந்தார்; ...” (ஏசா.53:9)**

இயேசு நூறு சதவிகிதம் தேவனாகவும், நூறு சதவிகிதம் மனிதனாகவும் இருந்தபடியால் அவரிலிருந்த மனுஷீக சுபாவத்தின் மேல் சிலுவையில் அறையப்பட்டு, மரணமடையும்படியான நியாயத் தீர்ப்பை இயேசுவின் மேல் பரலோகம் வழங்கியது. இதை நாம் விசுவாசிக்கும் பொழுது இரட்சிக்கப்பட்டு நீதிமானாக்கப்படுகிறோம்.

## 4.நியாயத் தீர்ப்பும் ஆசீர்வாதமும்

பிரியமானவர்களே, இயேசுவின் மேல் வந்த நியாயத் தீர்ப்பு மனித குலத்தின் மேல் வரவேண்டியது. நம்முடைய பரம பிதாவானவர் நம் மேல் அன்பு கூர்ந்தபடியினாலே பாவமில்லாத தம்முடைய குமாரனை நமக்காக சிலுவையிலே நியாயம் தீர்த்தார். நம்முடைய ஆதி தகப்பனும், தாயும் செய்த பாவம் நம் ஒவ்வொருவர் மேலும் நிலை கொண்டிருந்தது, இப்பொழுது நம்முடைய பாவத்தை இயேசு தமது சரீரத்தில் ஏற்றுக்கொண்டபடியினால் நாம் பாவத் திற்கும், சாபத்திற்கும் நீங்கலாகியிருக்கிறோம்.

**“மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்.” (கலாத். 3:13)**

**“அந்தப்படியே... ஒரே ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர்மூலமாய்ப் பெற்றிருக் கிறோம்.” (எபே. 2:18)**

இப்பொழுது இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் தன் மனசாட்சியை கழுவ ஒப்புக்கொடுத்த ஒவ்வொரு விசு வாசியுடனும் கிறிஸ்துவின் ஜீவன் தங்கியிருக்கிறது. இயேசு கிறிஸ்துவுக்குள்ளாக ஒரே சரீரமாயிருக்கிறோம். இயேசு சொன்னார்: **“என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச் செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனி கொடுக்கமாட்டாதது போல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள்.’’ (யோவான். 15:4)**

இரட்சிக்கப்பட்ட ஒவ்வொருவரும் இயேசுவின் சிலுவை மரணம் எனக்காகத்தான் என்று விசுவாசித்து ஏற்றுக் கொள்ளும்போது, அந்த விசுவாசத்தினாலே நீதிமான் களாக்கப்பட்டு அவரில் நிலைத்திருக்கிறோம் என்பது உறுதி. இயேசு சொன்னார்: **''என்னில் கனி கொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப் போடுகிறார்; கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிகக் கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம் பண்ணுகிறார்.'' (யோ. 15:2)**

நம்முடைய (மாம்சத்திலும்) சரீரத்திலும் கிறிஸ்துவுக்கு விரோதமான கிரியைகள் செயல்படத்துவங்கினால், சாத்தான் மூலம் சோதிக்கப்பட கர்த்தர் இடம் கொடுப்பார். அந்தச் சோதனை கிறிஸ்துவுக்குள்ளான நம்முடைய வாழ்க்கையில் கனியில்லாத பகுதிகளை சுத்திகரிக்கும்.

பவுல் தன் உடன் ஊழியர்கள் இமெனே அலெக்சந்தர் கிறிஸ்துவை விட்டு பின்வாங்கிய சமயத்தில் **"...அவர்கள் தூஷியாதபடி சிட்சிக்கப்பட அவர்களைச் சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுத்தேன்.'' (1தீமோ. 1:20) என்றார்.**

ஆனாலும் உயிரோடிருக்கும் இயேசு கிறிஸ்துவிடம் சென்று என்னை மன்னியும், என்னை மீண்டும் ஏற்றுக்கொள்ளும் என்று நாம் சொல்லும்போது, நம்முடைய தவறுகளைக் கிருபையாய் மன்னிக்கிறார். நம்மை ஏற்றுக்கொண்டு இவன் என் மகன், இவள் என் மகள் என்று நம்மை அரவணைக்கிறார். சாத்தான் நம்மை விட்டு பயந்து ஓடிப்போகிறான். இழந்து போன இரட்சிப்பு மீண்டும் புதுப்பிக்கப்படுகிறது. நம்முடைய புதுப்பிக்கப்பட்ட ஆத்துமாவை தேவன் ஆசீர்வதிக் கிறார்.

**“நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, ஜோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை.” (யாக். 1:17)** இழந்து போன நன்மைகள் மீண்டும் கொடுக்கப்படுகிறது.

**“துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும்,**

**கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.**

**அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப்போலிருப்பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்.” (சங். 1:1–3)**

கர்த்தருக்கேற்றபடி நடந்து அவருடைய வார்த்தைகளை நாம் கைக்கொள்ளும்போது நாம் இவ்விதமாய் ஆசீர்வதிக்கப்படுகிறோம். இன்னும் தாவீது இராஜா சொல்லும் அவருடைய சாட்சியின் சங்கீதத்தைப் பாருங்கள்:

**“கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்.**

**அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டு போய் விடுகிறார்.**

**அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்.**

**நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்; உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்.**

**என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம்பண்ணுகிறீர்; என் பாத்திரம் நிரம்பி வழிகிறது.**

**என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்; நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்." (சங். 23:1 - 6)**

தாவீது இராஜாவின் விசுவாச அறிக்கை ஒவ்வொரு கர்த்தருடைய பிள்ளைகளையும் உற்சாகப்படுத்துகிறது. கர்த்தருடைய பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறார்:

**"நம்பிக்கையுடைய சிறைகளே, அரணுக்குத் திரும்புங்கள்; இரட்டிப்பான நன்மையைத் தருவேன், ..." (சகரியா. 9:12).**

## முடிவுரை

பிரியமானவர்களே, பாவம் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாதபடியால் மனிதனை ஆண்டு கொள்ளுகிறது (ஆட்சி செய்கிறது). பாவம் செய்த மனிதன் மேல் சாபம் வருகிறது. சாபத்தினால் ஆசீர்வாதக் குறைச்சல் உண்டாகிறது, வேதனைகள் பெருகுகிறது, சரீர நோய்கள் உண்டாகிறது, சகலமும் வெறுமையாகிவிடுகிறது. ஆதாமும், ஏவாளும் தேவனுடைய வார்த்தையைத் தள்ளி சாத்தான் சொன்னதைக் கேட்டதினால், ஆசீர்வதிக்கப்பட்ட பூமியைத் தேவன் சபித்தார். இந்த சபிக்கப்பட்ட பூமியையும் அதின் குடிகளையும் இப்பொழுது சாத்தான் ஆண்டு கொண்டிருக்கிறான். ஆதாமும் ஏவாளும் செய்த பாவத்தினால் உண்டான சாபத்தை தேவனாகிய கர்த்தர் பரிசுத்த ஆவியினால் புருஷனை அறியாத கன்னியின் கர்ப்பத்தில் உற்பவித்து, பிறந்து நமது பாவத்தையும் அதின் மூலம் நம்மேல் வந்த சாபத்தையும் தன்மேல் ஏற்றுக்கொண்டு, மனிதன் மேல் சாத்தானுக்கு இருந்த ஆட்சியையும் அதிகாரத் தையும் தம் சிலுவை மரணத்தின் மூலம் அழித்து மனிதன் மேல் இனி சாத்தானுக்கு எந்தப் பிணைப்பும் இல்லை என்பதை உறுதிப்படுத்தினார். இதை வாசித்துக் கொண்டிருக்கும் எனக்கன்பான சகோதரரே, சகோதரியே: நீங்கள் என் மேலிருந்த பாவத்தையும் சாபத்தையும் இயேசுவின் மேல் நான் சுமத்தி விட்டேன், சிலுவையில் இயேசு சிந்தின இரத்தம் என்னைப் பாவம், சாபம் என்பவைகளிலிருந்து விடுதலையாக்கி விட்டது என்று நீங்கள் விசுவாசிக்கும் பொழுது ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.

இப்பொழுது இயேசுவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!.